# தமிழ் சுடர்

23 02 08


## சுடுகாடு பிரச்சினை:

## சமூக விரோதிகள் மீது புகா

மதுரை, பிப்.23-

மதுரை கோ.புதூர் சம்பக்குளம் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான சுடுகாடு உள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன் இந்த சுடுகாட்டில் போடப்பட்டிருந்த கூரை ஷெட் மற்றும் அங்கிருந்த அடி பைப் குழாய்களை யாரோ சிலர் உடைத்து அள்ளிச் சென்று விட்டனர். இதற்கு சம்பக்குளம் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனையடுத்து அந்த சுடுகாட்டில் சுகாதாரக் கேடு ஏற்படுவதாக கூறி சுடுகாட்டை வேறு இடத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டது. இதற்கு சம்பக்குளம் பகுதியைச் சேர்ந்த அரசியல் கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் பலர் கைது செய்யப்பட்டனர். பின்னர் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி முடிவு செய்யப்பட்டது.

இதற்கிடையே இந்த சம்பக்குளம் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சுடுகாட்டில் இருந்த கூரை கொட்டகை மற்றும் அடி பைப்குழாய்களை சமூக விரோதிகள் சிலர் உடைத்து திருடிச் சென்று விட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.